ights Reserved]

தரம்
5

# இரண்டாம் தவணை இறுதிக் கணிப்பீடு - 2023

புள்ளி

## கணிதம்

டெண் : ..............................

நேரம் : 1:15 மணித்தியாலம்

. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) இவ் இலக்கங்களில் பத்தினிடத்தில் மிகப் பெரிய பெறுமானத்தைக் கொண்ட இலக்கத்தைத் தெரிவு செய்க.


1) 589 2) 2435 3) 742

2) ஒரு பழப்பான தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 4ம் நாள் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பானப் போத்தல்கள் எத்தனை?

1ம் நாள் → 2ம் நாள் → 3ம் நாள் → 4ம் நாள்

836 → 861 → 886 → ?


1) 900 2) 911 3) 925


3) 


இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவில் என்ன பின்னமாகும்,

1) $\frac{1}{4}$ 2) $\frac{1}{2}$ 3) $\frac{3}{4}$

4) கீழ் உள்ள கடிகார முகங்களில் மூன்றுக்கு பதினைந்து நிமிடம் என்பதைக் காட்டும் கடிகாரத்தை தெரிவு செய்க.

1) 


2) 


3) 


5) 416 அப்பியாசக் கொப்பிகளை ஒருவருக்கு 4 வீதம் பகிர்ந்தளித்தால் எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்,

1) 104 2) 14 3) 140

6) 1km 50m ஐ மீற்றரில் எழுதும் போது சரியாகக் காட்டுவது,

1) 150 m 2) 1050 m 3) 10050 m

7) ரூபாய் 35.00 ற்கு ஒரு பயிற்சிக் கொப்பியும் ரூபா 12.50 ற்கு ஒரு பேனையையும் கொள்வனவு செய்து கொண்டு செலுத்த வேண்டிய மொத்தப் பணம் யாது?


1) ரூபாய் 47.50 2) ரூபாய் 47.00 3) ரூபாய் 22.50



kalvi.lk


8) 

சிறிய நிறைகளை அளக்கப் பயன்படும் இத்தராசு எவ்வகையைச் சேர்ந்தது.
1) விற்றராசு
2) இலத்திரனியல் தராசு
3) சமையலறைத் தராசு

9) 

இச்சதுரமுகியை புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டும் போது வெட்டுமுகத்தில் தோன்றும் முகத்தோற்றம் யாது?

1) சதுரம் 2) செவ்வகம் 3) முக்கோணி

10) 

பாத்திரம் A பாத்திரம் B

இப்படத்தில் காணப்படும் பாத்திரம் A கொள்ளக்கூடியது 1$l$ ஆகும். பாத்திரம் B கொள்ளக்கூடியது 125$ml$ ஆகும் எனின், பாத்திரம் A யை முற்றாக நிரப்ப பாத்திரம் B யினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்,

1) 10 தடவை 2) 4 தடவை 3) 8 தடவை

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

02. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.


1)

| | |
|---|---|
| 9 | 6 |
| 5 | 3 |

இவ் 4 இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

: ....................................

Education கல்வி

2) 


இவ்வெண் சட்டம் குறிக்கும் எண்ணின் எண் பெயரை சொற்களில் எழுதுக.

: ....................................................................

....................................................................

3) 9450 என்னும் எண்ணில் நூறினிடத்தில் அமைந்துள்ள இலக்கத்தின் பெறுமானம் யாது?

: ....................................

4) கீழே தரப்பட்டுள்ள எண்களை சிறிய எண்ணிலிருந்து பெரிய எண்வரை (ஏறுவரிசையில்) ஒழுங்குபடுத்தி எழுதுக.

15368, 51794, 15638, 32409 : ....................................................

($4 \times 3 = 12$ புள்ளிகள்)

03. 1) கூட்டுக.

| | $l$ | $ml$ |
|---|---|---|
| | 4 | 648 |
| + | 4 | 410 |
| | | |

2) இரு போத்தல்களில் உள்ள தோடம்பழச் சாறு முறையே 180*ml*, 150*ml* ஆகும் எனின், 1*l* தோடம்பழச் சாறு தயாரிப்பதற்கு மேற்குறிப்பிட்ட தோடம்பழச் சாற்றுடன் எவ்வளவு நீர் சேர்க்கப்பட வேண்டும்? : ..........................

3) கழிக்குக.

| | kg | g |
|---|---|---|
| | 56 | 75 |
| − | 31 | 500 |
| | | |

4) ஒரு பேக்கரிக்கு 56kg கோதுமை மா கொண்டுவரப்பட்டது. அதில் 25kg 800g பயன்படுத்தப்பட்டால் எஞ்சியுள்ள கோதுமை மாவின் அளவு யாது? : ..........................

(4 × 3 = 12 புள்ளிகள்)

04. 1) பெருக்குக.

| | m | cm |
|---|---|---|
| | 12 | 32 |
| × | | 4 |
| | | |

2) ஒரு சட்டை தைப்பதற்கு 2*m* 70*cm* துணி தேவை அத்தகைய 5 சட்டைகளைத் தைப்பதற்கு தேவையான துணியின் அளவு யாது? : ..........................

3) வகுக்குக.

$$7 \overline{)\,7\ 5\ 6}$$

4) ஒரு கொடிச் சரத்தில் 6 கொடிகள் வீதம், 846 கொடிகளைக் கொண்டு எத்தனை கொடிச் சரங்களைத் தயாரிக்கலாம்? : ..........................

(4 × 3 = 12 புள்ளிகள்)

05. விலைச் சுட்டியை அவதானித்து அவற்றில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.


| | பொருள் | 1kg யின் விலை | | அளவு | பெறுமானம் | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| 1) | சீனி | 250 | 00 | 500g | .............. | .............. |
| 2) | பருப்பு | .............. | .............. | 250g | 150 | 00 |
| 3) | அரிசி | 110.00 | 00 | .............. | 55 | 00 |
| 4) | கருவாடு | 900.00 | 00 | 250g | .............. | .............. |
| 5) | மொத்தம் | | | | | |

6) இப்பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு கடைக்காரரிடம் ரூபா 1000.00 காசுத்தாள் ஒன்றைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? : ..........................

(6 × 2 = 12 புள்ளிகள்)




kalvi.lk

06. i) 

1) அருகில் உள்ள உருவத்தில் $\frac{4}{10}$ ஐ நிறந்தீட்டிக் காட்டுக.

2) நிறம் தீட்டிய பின் எஞ்சிய பகுதியை தசம எண்ணாக எழுதுக. : ..............................

(2 × 3 = 06 புள்ளிகள்)

ii) 

1) இவ்வுருவின் பெயர் யாது? : ..............................

2) இவ்வுருவில் உள்ள விளிம்புகளினதும் உச்சிகளினதும் மொத்த எண்ணிக்கை யாது? : ..............................

(2 × 3 = 06 புள்ளிகள்)

07. 1) ஒப்பந்தக்காரர் ஒருவர் தீந்தை பூசுவதற்கு 14*l* 800*ml* நீல நிறத் தீந்தையும் 8*l* 650*ml* வெள்ளை நிறத் தீந்தையும் கொண்டு வந்தார். அவர் கொண்டு வந்த நீல நிறத் தீந்தைக்கும் வெள்ளை நிறத் தீந்தைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? : ..............................


2) ஒரு சாக்குப் பையில் 20kg 500g அரிசி இருந்தது. அப்பையினுள் மேலும் 12kg 750g அசிரி இடப்பட்டது. இப்போது அச்சாக்குப் பையில் உள்ள அசிரியின் மொத்த நிறை யாது? : ..............................

3) பேருந்து ஒன்றில் 68 பிரயாணிகள் இருந்தனர். முதலாவது தரிப்பிடத்தில் 19 பேர் இறங்கியதோடு 12 பேர் அதில் ஏறினர். இப்போது இப்பேருந்தில் உள்ள பிரயாணிகள் மொத்தம் எத்தனை பேர்? : ..............................

4) i) ஹர்சாந் முற்பகல் 6.55 ற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 20 நிமிடங்கள் பயணம் செய்து பாடசாலையை அடைந்தான் எனின், அவன் பாடசாலையைச் சென்றடைந்த நேரம் யாது? : ..............................

ii) அவன் பாடசாலையை அடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக. : ..............................

5) ஒரு வகுப்பிலுள்ள 42 மாணவர்களில் தாம் ஒவ்வொருவரும் விரும்பும் செல்லப் பிராணிகள் பற்றிய தரவுகள் வரைபில் குறிக்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.




i) பூனையை விரும்பும் மாணவர்களில் மும்மடங்கினர் கிளியை விரும்புகின்றனர் இதனை உரிய நிரலில் குறித்து நிழற்றிக் காட்டுக. : ..............................

ii) சம எண்ணிக்கையில் மாணவர்கள் விரும்பும் செல்லப் பிராணிகள் எவை என்பதை எழுதுக. : ..............................

(5 × 4 = 20 புள்ளிகள்)



kalvi.lk